www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| நாடகமும் அரங்கியலும்<br>**Drama & Theater** | Three Hours<br>Gr -12 (2023) | 58 | T | I,II |

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி I

- ❖ **இப்பகுதியின் எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ **1 – 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடைகளைத் தெரிவு செய்க.**

01. பின்வரும் கலை வடிவங்களில் 'மனவெளியில் பரிணமிக்கும்' உருவமற்ற கலை வடிவங்கள்
1) ஓவியம், சிற்பம் 2) நடனம், இசை 3) சிறுகதை, நாவல்
4) நாடகம், நடனம் 5) ஓவியம், சிறுகதை ( )

02. கலை என்பதற்கான 'Arts' என்ற ஆங்கிலச் சொல்லின் நேரடிக் கருத்து
1) அழகு 2) ஆற்றல் 3) செம்மை 4) நுட்பம் 5) வளர்ச்சி ( )

03. பின்வருவனவற்றில் 'குழைமைக் கலை'யாக கொள்ளப்படக் கூடியது.
1) ஓவியம் 2) நடனம் 3) இசை 4) இலக்கியம் 5) மட்பாண்டம் ( )

04. "அழகை கண்டு பிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவம் கலை" எனக் கூறியவர்.
1) தாகூர் 2) மாசேதுங் 3) அரவிந்தர்
4) இராசமாணிக்கனார் 5) குட்மன் ( )

05. இந்திய கலைபற்றிய கருத்து நிலைகளின் அடிப்படையாக அமைவது.
1) மகிழ்ச்சி 2) யதார்த்தம் 3) உளவியல் 4) சமயம் 5) பொழுதுபோக்கு ( )

06. மேல்வருவனவற்றில் 'பாடலே அரங்காக' காணப்படுவது.
1) நடன நாடகம் 2) பலே 3) இசை நாடகம்
4) வில்லுப்பாட்டு 5) கதாகாலோட்சபம் ( )

07. பீக்கிங் ஒப்பேரா (Peking opera) வின் தாயகம்
1) சீனா 2) யப்பான் 3) பிரான்ஸ் 4) இத்தாலி 5) இந்தியா ( )

08. நாடகத்தினை 'கதை தழுவிவரும் கூத்து' என்று கூறியவர்.
1) கா. சிவத்தம்பி 2) சு. வித்தியானந்தன் 3) பரதமுனிவர்
4) சி. மௌனகுரு 5) அடியார்க்கு நல்லார் ( )

09. பின்வருவோரில் ஈழத்தின் 'வில்லிசை'க் கலை ஆளுமையாக கொள்ளப்பட்டவர்.
1) வி. வி வைரமுத்து 2) சின்னமணி 3) தட்சணா மூர்த்தி
4) பத்மநாதன் 5) பூந்தான் யோசேப்பு ( )

10. மேல்வருவனவற்றில் சிறுகதையில் இருந்து நாடகம் வேறுபடுவதற்கான பிரதான காரணம்
1) கதை சொல்லப்படுவதால் 2) கதைக் கருவை கொண்டிருப்பதால்
3) பாத்திரங்களைக் கொண்டிருப்பதால் 4) ஆற்றுகைக் கலையாக இருப்பதால்
5) தொடக்கம், நடு, முடிவு என்னும் அமைப்பை கொண்டிருப்பதால். ( )



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

11. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
அ) 'கமரா' என்ற கருவியே சித்திரிக்கும்
ஆ) பார்ப்போரை உடன் எதிர்கொள்ளும்.
இ) கருத்தை வெளிப்படுத்தும்.
ஈ) காட்சிகளை வெளிப்படுத்தும்
உ) நிகழும் கணத்திலேயே இறந்து போகும்.
இவற்றுள் 'சினிமா' வுடன் தொடர்புடைய கூற்றுக்கள் எவை?
1) அ, ஆ, ஈ 2) அ, இ, ஈ 3) அ, இ, உ 4) ஆ, இ, ஈ 5) ஆ, ஈ, உ ( )

12. "உலக இயல்பை போலச் செய்தலே நாடகம்" எனக் கூறியவர்.
1) பரத முனிவர் 2) அரிஸ்ரோட்டில் 3) பேர்னாட் ஷோ
4) அபிநவகுப்தர் 5) இளம் பூரணார் ( )

13. "நடிகன் பாத்திரமாக வாழ்ந்து பெறும் அனுபவத்தினூடாக பாத்திரத்தை சித்திரிக்க வேண்டும்" என்று கருதிய நெறியாளர்.
1) போட்டோல் பிறெக்ட் 2) பரதமுனிவர் 3) அன்ரன் செக்கோவ்
4) குறொட்டோவ்ஸ்கி 5) ஸ்ரனிஸ்லவஸ்கி ( )

14. பின்வரும் நாடக ஆசிரியர்களில் 'பா' (கவிதை) நாடக ஆசிரியர் அல்லாதவர்
1) முருகையன் 2) மஹாகவி 3) பேரா. க. கணபதிப்பிள்ளை
4) அம்பி 5) நீலாவாணன் ( )

15. கிரேக்க அரங்கின் தொடக்க காலத்தில் ஊர்வலத்தில் மேற்கொள்ளப்படும் 'ஸ்ரசிமன்' எனப்படுவது.
1) பாடல்களை உரத்துப் பாடுவது 2) டயோனீசியஸ் உருவை கொண்டு வருதல்.
3) கூட்டாக ஆடிப்பாடுதல் 4) சில இடங்களில் தரித்து நின்று பாடுதல்
5) இரட்டைப்புல்லாங்குழல் இசைத்தல். ( )

16. கிரேக்க அரங்கில் 3வது நடிகரை அறிமுகம் செய்தவர்
1) தெஸ்பிஸ் 2) ஏஸ்கிலஸ் 3) அரியோன்
4) சோபோகிளிஸ் 5) யூரிப்பிடீஸ் ( )

17. ஐரோப்பிய நாடக வரலாற்றில் மிகப் பழமையான நாடக எழுத்துரு எனக் கருதப்படுவது.
1) தபேர்சியன்ஸ் (The Persians) 2) த சப்ளையன்ற் வுமன் (The Suppliant woman)
3) அஜாக்ஸ் (Ajax) 4) அகமெம்னன் (Agamewnon)
5) எலெக்ரா (Electra) ( )

18. கிரேக்க சற்றயர் (Satyr) நாடகம் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.
அ) அங்கதச் சுவையுடைய நாடக வகை.
ஆ) கனதியான உணர்வுகளில் இருந்து விடுபட்டு கலகலப்பான சூழலை உருவாக்கும்.
இ) கேலி கிண்டலினூடாக அரசியல் நிலமைகளை விமர்சிக்கும்.
ஈ) கற்பனையை விட சமகால விடயங்களுக்கு முக்கியத்துவமளிக்கும்.
உ) ரஜடி நாடக ஆசிரியர்கள் இந்நாடகங்களை எழுதினார்கள்.
இவற்றுள் சற்றயர் (Satyr) நாடகம் பற்றிய கூற்றுக்கள் எவை?
1) அ, இ, உ 2) இ, ஈ, உ 3) அ, ஆ, உ
4) ஆ, இ, ஈ 5) அ, ஈ, உ ( )

19. பின்வருவோரில் 'அபத்த' நாடக ஆசிரியர்
1) அன்ரன் செக்கோவ் 2) அன்ரோ அன்ரோயின் 3) ஸ்ரனிஸ்லவஸ்கி
4) யூஜின் அயனெஸ்கோ 5) ஹென்றிக் இப்ஸன் ( )

20. யதார்த்த வாத நாடகங்களை அரங்கிலே சித்தரிப்பதற்காகவே தனது நடிப்புச் சிந்தனைகளை முன்வைத்த நெறியாளர்.
1) அன்ரன் செகோவ் 2) அன்ரோ அன்ரோயின் 3) ஸ்ரனிஸ்லவஸ்கி
4) பெற்டோல் பிரக்ட் 5) குறொட்டோவஸ்கி ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

21. அரிஸ்ரோட்லில் குறிப்பிடும் 'கதாசிஸ்'
    1) நடிப்பு முறைக்கானது
    2) கதைப்பின்னலுக்கானது
    3) பார்வையாளர் மீதான விளைவாவது
    4) காட்சி அமைக்கும் முறைமைக்கானது
    5) பாத்திரத்தை சிறப்பிப்பதற்கானது ( )

22. வடமொழி நாடகங்களில், நாடகத்தின் தலைமைப் பாத்திரத்தின் நோக்கம் வெற்றி பெறுவதற்கு தொடர்பற்றவேறொருவர் துணைபுரிவதாக கற்பனை செய்யப்படும் வரலாறானது அர்த்த பிரகிருதிகளில் பின்வருமாறு குறிப்பிடப்படும்.
    1) பதகா 2) பீஜ 3) பிரகரி 4) பிந்து 5) கார்ய ( )

23. பின்வரும் கூற்றுக்களை கருதுக.
    அ) உலக இயற்கையை பின்பற்றி வருவது.
    ஆ) லலித அங்க அசைவுகளுடையது.
    இ) கற்பனை மிக்க வியப்புத்தரும் நிகழ்ச்சிகளையுடையது.
    ஈ) நடை முறை வாழ்வியலை ஒத்திருக்கும்.
    உ) இயல்பான அபிநயங்களை வெளிப்படுத்துவது.
    இக்கூற்றுக்களில் 'லோகதர்மியை' குறிக்கும் கூற்றுக்கள்
    1) அ, ஆ, இ 2) அ, இ, உ 3) அ, ஈ, உ 4) இ, ஈ, உ 5) ஆ, இ, உ ( )

24. நாட்டியசாஸ்திரம் கூறுகின்ற அரங்க வெளியில் நடிகர்கள் ஆற்றுகைக்கு தயாராக நிற்கின்ற இடம்.
    1) ரங்க பீடம்
    2) ரங்க சீர்யம்
    3) நேபத்ய கிரகம்
    4) அம்பலம்
    5) திரியஸ்ரா ( )

25. பின்வரும் ரஸங்களில் கோப உணர்வை வெளிப்படுத்தும் ரஸம்
    1) சிருங்காரம்
    2) ஹாஸ்யம்
    3) பீபத்ஸம்
    4) வீரம்
    5) ரௌத்திரம் ( )

26. வடமொழி நாடகங்களில் 'நாந்தி' எனப்படும் பாடல் பாடப்படுவது.
    1) நாட்டின் வளம் கூறுவதற்கு
    2) இயற்கையை வர்ணனை செய்வதற்கு
    3) கடவுள் வாழ்த்தாக பாடுவதற்கு
    4) நாடக விபரம் கூறுவதற்கு
    5) கதைப் பொருளை விளக்குவதற்கு ( )

27. 'ஸ்வப்ன வாசவதத்த' என்ற வடமொழி நாடகத்தினை எழுதியவர்.
    1) காளிதாசர் 2) சூத்ரகர் 3) அஸ்வகோஷர் 4) பாசர் 5) ஸ்ரீஹர்சர் ( )

28. 'எந்தையும் தாயும்' நாடகத்தின் பிரதான பாத்திரமாகிய 'சங்கரப்பிள்ளை' பாத்திரத்தினை முதன் முதலாக ஏற்று நடித்தவர்.
    1) எஸ். ரி. அரசு
    2) நா. சுந்தரலிங்கம்
    3) அ. பிரான்சிஸ் ஜெனம்
    4) குழந்தை ம. சண்முகலிங்கம்
    5) சிவயோகன் ( )

29. ஈழத்தில் 'ஊமத்தினை' பயன்படுத்தி அதிக நாடகங்களை மேடையேற்றியவர்.
    1) க. சிதம்பர நாதன்
    2) நீ. மரியசேவியர் அடிகள்
    3) குழந்தை ம. சண்முகலிங்கம்
    4) க. ரதிதரன்
    5) சி.மௌனகுரு ( )

30. "சமய கரணங்கள் நாடக அம்சங்களைக் கொண்டுள்ளன. இதில் இருந்து 'மக்கள் அரங்கு' தோன்றி இருக்க வேண்டும்" எனக் கூறியவர்?
    1) ஜோர்ஜ் தொம்சன்
    2) ஜோண் ஹரீசன்
    3) றிஜ்வே
    4) கீத்
    5) றிச்சாட் சதேன் ( )

31. 'சடங்கின் மூலங்களை' தமது நவீன அரங்கச் செயற்பாடுகளில் பயன்படுத்திய இருவர்
    1) குறொட்டோவ்ஸ்கி, அன்ரோனின் ஆர்த்தோ
    2) ஷேக்ஸ்பியர், மோலியர்
    3) பிரக்ட், மேய ஹோல்ட்
    4) சாமுவேல் பெக்கட், யூஜின் அயனெஸ்கோ
    5) ஷில்லர், அலெக்சாண்டர் டுமாக்ஸ் ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

32. திருக்குறள் குறிப்பிடுகின்ற அரங்கின் பெயர்
    1) பண்ணை 2) கூத்தம்பலம் 3) கூத்தாட்டவை
    4) எருமன்று 5) களத்துமேடு ( )

33. 'கொட்டகை நாடக மரபு' என அழைக்கப் பெற்ற நாடகமரபு
    1) கூத்து 2) இசை நாடகம் 3) தெருக்கூத்து
    4) சபா நாடகம் 4) விலாசம் ( )

34. வடமோடிக் கூத்து, காமன் கூத்து, காத்தவராஜன் கூத்து என்பவற்றுக்கு பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் முறையே
    1) மிருதங்கம், தப்பு, தவில் 2) மத்தளம், தப்பு, உடுக்கு 3) மத்தளம், உடுக்கு, டோலக்
    4) மிருதங்கம், தப்பு, உடுக்கு 5) தவில், மத்தளம், உடுக்கு

35. கோடை நாடகத்தில் வருகின்ற "கலையை அறியாதான் தர்பாரில் அதனை ஏறி இசைத்தல் இழுக்கு" என்ற வார்த்தையை பிரயோகிக்கும் பாத்திரம்
    1) மாணிக்கம் 2) சோமு 3) காசி 4) பஞ்சையர் 5) விதானை ( )

36. இடிப்பஸ் மன்னன் நாடகத்தில் "தனது கைகளை உயர்த்தி மன்னன் தனது கண்களைக் குத்திக் கொண்டான்" என்ற உரையாடல் பேசப்பட்டது.
    1) கிறியோனால் - குழாத்தினருக்கு 2) குழாத்தலைவனால் - கிறியோனுக்கு
    3) அனுக்கத்தானால் - கிறியோனுக்கு 4) கிறியோனால் - இடிப்பசுக்கு
    5) அனுக்கத்தானால் - குழாத்தினருக்கு ( )


37. இசை நாடகத்தில' பெரும்பாலும் 'முகாரி' இராகத்தினைப் பயன்படுத்தும் போது வெளிப்படும் உணர்வு
    1) கோபம் 2) சோகம் 3) வீரம் 4) மகிழ்ச்சி 5) காதல் ( )

38. படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் எழுதப்பட்ட நாடகம்




    1) செரிப்பழத்தோட்டம்
    2) இடிப்பஸ் மன்னன்
    3) ஒரு பாவையின் வீடு
    4) வெண்கட்டி வட்டம்
    5) கொடோவுக்காக காத்திருத்தல். ( )

39. படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் முன்வைக்கப்பட்ட அரங்கப்பாணி



    1) காவியபாணி நாடகம்
    2) குருரப்பாணி நாடகம்
    3) பிரயோக அரங்கு
    4) அபத்தபாணி நாடகம்
    5) யதார்த்த அரங்கு ( )

40. அருகிலுள்ள படத்தில் உள்ளவரால் உருவாக்கப்பட்ட அரங்க நிறுவனம்



    1) நாடக அரங்க கல்லூரி
    2) திருமறைக்கலாமன்றம்
    3) லங்கா சுபோத விலாசபை
    4) சரஸ்வதி விலாசபை
    5) நடிகர் ஒன்றியம் ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி – II

❖ **பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களும் பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக?**

### பகுதி - A

01. 1) கலையின் வகைப்பாடுகளை விபரிக்குக. (6 புள்ளிகள்)
    2) நாடகக் கலையின் ஆற்றுகைப் பரிமாணத்தினை விபரித்து அதன் சிறப்பியல்புகளை முன்வைக்குக. (9 புள்ளிகள்)

02. 1) கூத்துக் கலைக்கும் தமிழ் பண்பாட்டுக்குமிடையிலான தொடர்புகளை விளக்குக. (8 புள்ளிகள்)
    2) இசைநாடக மரபு ஈழத்தின் அரங்கப்புலத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை விபரிக்குக. (5 புள்ளிகள்)

03. யப்பானிய கபூகி (Kabuki) அரங்கு மற்றும் ஐரோப்பிய புறசீனியம் அரங்கு என்பவற்றில் மேல்வருவன அமையுமாறு விளக்குக.
    1) ஆற்றுகை வெளி
    2) ஆற்றுகை முறை
    3) பார்வையாளர் துலங்கல்

    (3 x 5 = 15 புள்ளிகள்)

### பகுதி - B

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

04. இடிப்பஸ் மன்னன், கோடை, இராவணேசன் ஆகிய நாடக பாடங்களில் வரும் 'ஜொகஸ்ரா', 'செல்லம்', 'மண்டோதரி' ஆகிய பெண் பாத்திரங்கள் படைக்கப்பட்ட முறைகளை விபரித்து ஒப்பீடு செய்க. (15 புள்ளிகள்)

05. பின்வரும் மூன்று காலகட்டங்களிலும் தமிழ் நாட்டில், தமிழ் அரங்கு கொண்டிருந்த நோக்கங்களை விபரிக்குக.
    1. வணிகயுகக்காலம்
    2. கோவில் பண்பாட்டுக்காலம்
    3. விஜய நகர நாயக்க மன்னர் காலம்

    (3 x 5 = 15 புள்ளிகள்)

06. மேல்வருவனவற்றில் எவையேனும் மூன்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக.
    1) கதாசிஸ்
    2) லோகதர்மி
    3) ஊமம்
    4) பதினோராடல்
    5) பள்ளு

    (3 x 5 = 15 புள்ளிகள்)



agaram.lk